**கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு - 2023**
**------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவையென நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கைப் பொறுப்பின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிக்கை பொறுப்பினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாதபோது செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நம்பிக்கைப் பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பொறுப்பின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்;

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிலையான வைப்பொன்றிற்கான மீளாய்வாண்டிற்குரிய பெறப்பட வேண்டிய வட்டி புதிய வட்டி வீதத்திற்கு இணக்கப்பட்டு கணக்கிடப்படாமையின் காரணத்தினால் ரூபா 118,303 இனால் ஆண்டின் வருமானம் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகள் தாயரிக்கும் போது சீராக்கப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடத்திற்குரிய வட்டி சரியாக கணிக்கப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிலையான வைப்புகளுக்காக மீளாய்வாண்டிற்குரிய வட்டி ரூபா 3,781,917 ஆன போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,935,342 என காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 153,425 அதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகள் தாயரிக்கும் போது சீராக்கப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடத்திற்குரிய வட்டி சரியாக கணிக்கப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெரஹரா பொறுப்பினால் மீளாய்வாண்டில் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையாக ஐந்தொகையில் ரூபா 14,324,790 என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட வேண்டிய வட்டிக்கான உறுதிப்படுத்தலொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டிராததுடன் வட்டி வீதம் தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளமையினால் அவ் வட்டி வீதத்தினை அடிப்படயாகக் கொண்டு வட்டி கணிக்கப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்திலிருந்து மீதி உறுதிப்படுத்தலொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட 877(2)(ஈ) நிதிப் பிரமாணம் | கணக்கு ஆண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2024 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், செயலாற்றல் அறிக்கை அதனுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் தொழில் முனைவின் காரணத்தினால் 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்தலானது தாமதிக்கப்பட்டுள்ளது. | சுற்றிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,125,760 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,034,194 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,091,566 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் பெரஹரா வருமானம் மற்றும் முதலீட்டு வருமானம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா பொறுப்புச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்பு தாபிக்கப்பட்ட நோக்கமான கண்டி வருடாந்த எசல பெரஹராவின் போது பயன்படுத்த வேண்டிய பொருட்கள் உற்பத்தியில் ஈடுபடலினை செயற்படுத்தவதற்கு மீளாய்வாண்டினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எசல பெரஹராவின் போது பயன்படுத்தப்படும் பொருட்கள் ஸ்ரீ தலதா மாளிகையினால் உற்பத்தி செய்யப்படுகின்றமையினால் பொறுப்பினால் மேலதிக கிரயமொன்று ஏற்கப்படல் விளைவற்றதொன்றாகும். | பொறுப்பின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு அல்லது அந் நோக்கங்கள் தேவையின் பிரகாரம் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 திசெம்பர் 22 திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.4 ஆம் பந்தி மற்றும் அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் 2020 யூலை 16 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் கணக்காண்டு முடிவனைந்து 05 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், கடந்த ஆண்டின் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பாக பொறுப்பின் முன் கூட்டமொன்றின் போது கலந்துரையாடப்பட்டு குறித்த பிரிவுகளுக்கு தெரிவிக்கப்படுதவற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுகக்படும். | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |